**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், எம்.எ., பி.எல்.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 14 ம் நாள் திங்கட்கிழமை

IA.No.06/2024 in OS.No.14/2019

(TNTM03000021/2019)

1. கனகம்மாள்(இறந்தார்)

2. பாலசுந்தரம்

3. ஜெயா

4. V.நீலமேகன்

5. V.விஜயகுமார்

6. V.வேல்முருகன்

7. சித்ரா ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. K.தஞ்சன்

2. R.வசந்தா

3. R.வள்ளி

4. M.பொம்மி

5. V.பரமேஸ்வரி

6. D.கலைவாணி

7. K.P.பாஸ்கரன்

8. ராதாகிருஷ்ணன்

9. வீரமோகன்

10. சீனிவாசன்

11. ரகோத்தமன்

12. பாக்கியலஷ்மி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக 08.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவக்குமரன், B.A., B.L., திரு.S.கைலாஷ்,BE.,MBA.,BL., ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.G.செல்வராஜ்,B.A.,B.L., திரு.V.அறிவழகன்,M.A.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 12 வரையிலான எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் எதிர்மனுதாரர்களுக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

மனு ஷெட்யூலில் கண்டுள்ள விவரப்படி வழக்குரையை திருத்தம் செய்ய கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் இந்த மனுவில் 2-ம் மனுதாரர், அசல் வழக்கில் 2-ம் வாதி. இந்த மனுவை தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்திருக்கிறார். நாங்கள் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1-ம் மனுதாரர் கனகம்மாள் 26.03.2021 ஆம் தேதி இறந்துவிட்டார். கனகம்மாளின் கணவர் ஏற்கனவே இறந்துவிட்டார். கனகம்மாளுக்கு ஒரு மகள், இரண்டு மகன்கள். இந்த மனுவில் 10 முதல் 12 எதிர்மனுதாரர்களாக கனகம்மாளின் வாரிசுகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அவர்களை தவிர கனகம்மாளுக்கு வேறு வாரிசுகள் இல்லை. 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் எங்களுடன் சேர்ந்து

இந்த மனுவை தாக்கல் செய்ய வரவில்லை. எனவே அவர்களை எதிர்மனுதாரர்களாக இந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்கள். 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க இந்நீதிமன்றம் இ.ம.எண்.4/2024, இ.ம.எண்.5/2024-ஐ அனுமதித்துள்ளது. அதன் அடிப்படையில் இவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வழக்குரையை திருத்தம் செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3**. <u>6 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

இந்த மனுவை தவறான விவரங்களை கூறி மோசடியாக தாக்கல் செய்துள்ளார்கள். இந்த மனு சட்டப்படி ஏற்புடையதல்ல. இந்த மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. மனுதாரர் தரப்பினர்களை சேர்க்க வேண்டி மட்டுமே மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மட்டும்தான் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவின் பேரில் தரப்பினர்களை வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் மனுவில் பாக விகிதங்களையும், சொத்து மதிப்பையும் மேலும் பரிகார பகுதியில் உள்ள சங்கதிகளையும், சொத்து மதிப்பு குறித்த விவரத்தையும், மாற்றம் செய்ய இம்மனுவில் விவரம் கூறியிருக்கிறார்கள். மேற்படி திருத்தங்கள் செய்வதற்கு நீதிமன்றம் எந்த ஆணையும் பிறப்பிக்கவில்லை. 10 முதல் 12 எதிர்மனுதாரர்களை வழக்கில் சேர்க்க மட்டுமே நீதிமன்றம் அனுமதித்துள்ளது. பாகவிகிதம், சொத்து மதிப்பு மற்றும் பரிகாரத்தை நீக்கம் செய்வதற்கான எந்த உத்தரவும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கவில்லை. எனவே தரப்பினர்களை மட்டும் வழக்குரையில் சேர்க்க அனுமதிக்க வேண்டும் மற்ற விவரங்களுக்கு எதிராக மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4. மனுதாரர் தரப்பு வாதுரையின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும் போது பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த போது 1-ம் வாதி கனகம்மாள் இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகளை வழக்கில் சேர்க்க மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.4/2024, இ.ம.எண்.5/2024 ஆகியவை

தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. அதன் அடிப்படையில் இறந்த 1-ம் வாதியின் வாரிசுகளை 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகளாக சேர்க்க வழக்குரையை திருத்தம் செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1-ம் வாதியாக இருந்த கனகம்மாளின் வாரிசுகளை பிரதிவாதிகளாக சேர்ப்பதால் பாகவிதம் குறித்தும், வழக்கில் பரிகாரப் பகுதியிலும், சொத்து குறித்த மதிப்பும் திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகும். அவ்வாறு திருத்தம் செய்வதால் வழக்கின் தன்மை மாறுபாடு அடையாது பிரதிவாதிகளுக்கும் எவ்வித இழப்பும் ஏற்படாது. எனவே மனுவை அனுமதிக்க வேண்டும். எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரையில் சொத்துக் குறித்த மதிப்பு, பாகவிகிதம் மற்றும் பரிகாரம் நீக்கம் ஆகியவற்றை நீதிமன்றத்தின் அனுமதி பெறாமல் மாற்றம் செய்ய தாக்கல் செய்திருக்கும் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறியிருப்பது ஏற்புடையதல்ல. பாகப்பிரிவினை வழக்கில் வாதியை எதிர்வாதியாக சேர்த்திருப்பதால் பரிகாரத்தில் உள்ள பாக அமைப்பு மாறுபாடு அடைகிறது. எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

**<u>5. எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையின் சுருக்கம்:-</u>**

7. எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும் போது, மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன 1-ம் வாதியின் வாரிசுகளை சேர்க்க அனுமதிக்க வேண்டி மட்டுமே மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. நீதிமன்றத்தால் அது மட்டுமே அனுமதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இந்த திருத்தல் மனுவில் பாகவிகிதம், சொத்து மதிப்பு மற்றும் பரிகாரப் பகுதிகளில் திருத்தம் செய்வதற்காக தாக்கல் செய்திருக்கும் மனு ஏற்புடையதல்ல. நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட மனுக்களின் அடிப்படையில் வாரிசுகளை மட்டும் சேர்க்க முடியும். சொத்து குறித்த விவரம் மாற்றம் செய்யக்கூடாது. மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் இம்மனு ஏற்புடையதல்ல மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

6. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

7. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம், ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

8. **பிரச்சனைக்கான தீர்வு:-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்த போது, 1-ம் வாதி கனகம்மாள் இறந்துள்ளார். இறந்து போன 1-ம் வாதி கனகம்மாளின் வாரிசுகள் இவ்வழக்கில் தரப்பினர்களாக 10 முதல் 12 எதிர்வாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.4/2024, இ.ம.எண்.5/2024 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவை இரண்டும் இந்த நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு இந்த திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த திருத்தல் மனுவில் இறந்து போன 1-ம் வாதி கனகம்மாளின் வாரிசுகள் மனுதாரர்களுடன் சேர்ந்து செயல்படாததால் அவர்களை எதிர்த்தரப்பினராக வழக்கில் எதிர்வாதிகளாக சேர்க்க வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியும், பாகம் சம்பந்தமான விகிதங்களை திருத்தம் செய்யவும், சொத்துக் குறித்த மதிப்பை திருத்தம் செய்யவும், பரிகாரப் பகுதியில் பாகவிகிதத்தை மாற்றம் செய்யவும், வழக்குரையை திருத்தம் செய்வதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1-ம் வாதியின் வாரிசுகள் எதிர்வாதிகளாக சேர்க்கப்பட உள்ளதால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவும், பாகம் குறித்த விகிதத்தை திருத்தம் செய்யவும், சொத்து குறித்த மதிப்பை திருத்தம் செய்யவும், பரிகாரம் குறித்த பகுதியை திருத்தம் செய்யவும் இந்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், வழக்கை மேல் நடத்த இந்த திருத்தம் அவசியம் என்றும் மனுவில் விவரம் கூறப்பட்டு மனுதாரர் தரப்பில் மனுவை அனுமதிக்கும்படி வாதம் செய்யப்பட்டது.

9. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், இறந்துபோன வாதியின் வாரிசுகளை சேர்க்க மட்டுமே நீதிமன்றம் அனுமதித்துள்ளது. ஆனால் மனுவில் அசல்

வழக்குரையில் உள்ள சொத்து குறித்த மதிப்பு, பாகவிகிதம், பரிகார பகுதியில் திருத்தம் செய்வதற்காக நீதிமன்றத்தின் உத்தரவு இன்றி தாக்கல் செய்துள்ள இந்த மனுவை ஏற்கக்கூடாது, தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர் உரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காகும். பாகப்பிரிவினை வழக்குகளில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் சம உரிமை, சமபலமுடைய தரப்பினர்கள் ஆவார்கள். இந்த வழக்கில் 1-ம் வாதி இறந்துள்ளார். அவரது வாரிசுகள் மனுதாரர்களுடன் சேர்ந்து வழக்கை மேல்நடத்த முன் வராததால் 10 முதல் 12 பிரதிவாதிகளாக சேர்க்க ஏற்கனவே இ.ம.எண்.4/2024, இ.ம.எண்.5/2024 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுக்கள் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1-ம் வாதி இறந்ததால் அவருடைய வாரிசுகள் 10 முதல் 12 எதிர்வாதிகளாக சேர்க்க இருப்பதால் அசல் வழக்கில் வாதிகளின் எண்ணிக்கை மாறுபாடு அடைகிறது. பிரதிவாதிகள் எண்ணிக்கை கூடுதல் அடைகிறது. எனவே சொத்து குறித்த பாக விகிதத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அது குறித்து திருத்தம் செய்ய மனுதாரர்கள் அனுமதி கோரியிருப்பது ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

11.எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்யும்போது சொத்து மதிப்பு மற்றும் பாகம் குறித்த பரிகாரங்கள், பாகவிதங்கள் அசல் வழக்கில் திருத்தம் செய்ய நீதிமன்றத்தின் உத்தரவு இல்லாமல் இம்மனுவை தாக்கல் செய்திருப்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர் வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனென்றால் அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது இருந்த வாதிகளின் எண்ணிக்கை தற்போது 1-ம் வாதியின் வாரிசுகள் எதிர்வாதிகளாக சேர்க்கப்பட இருப்பதால் வாதிகளின் பாகவிகிதம் மாறுபாடு அடைகிறது. அதற்கு தனியாக வழக்குரையை திருத்த மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இம்மனுவிலேயே அந்த பரிகாரம் கோரி இருப்பது ஏற்புடையதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வாதிகளின் எண்ணிக்கை குறைந்து இருப்பதால் வாதிகளின் பாகம் குறைந்து இருப்பதால் அவர்களின் பாக சொத்து குறித்தும்,

வழக்குரையில் சொத்து மதிப்பு திருத்தம் செய்வதாலும், அசல் வழக்கில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அசல் வழக்கில் இருந்த 1-ம் வாதியின் வாரிசுகள் எதிர்வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளதால் வாதிகளின் பாகவிகிதம் மாறுபாடு அடைவதால் பரிகாரப் பகுதியில் திருத்தம் செய்வதற்கு இம்மனுதாரர்கள் கூறியிருக்கும் சங்கதிகள் ஏற்புடையதாக உள்ளது. எனவே மனுதாரர்களின் மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. மேலும் வழக்கின் தன்மையும் மாறுபாடு அடையாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்கினை மேல் நடத்தி முழுமையாக தீர்வு காண்பதற்கு 1-ம் வாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்து அசல் வழக்குரையை திருத்தம் செய்து கொண்டு மேல் நடத்தினால்தான் இவ்வழக்கை முழுமையாக தீர்வு காண முடியும். எனவே மனுதாரரின் மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக**, மனுதாரர் மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.07.14 17:51:18 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:-</u>** இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2025.07.14 17:51:33 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.